
தமிழ்நாடு அரசு

# வரவு – செலவுத் திட்டம் குறித்த குடிமக்களுக்கான கையேடு
# 2024-2025

தமிழ்நாடு அரசு

# வரவு – செலவுத் திட்டம்
# குறித்த குடிமக்களுக்கான கையேடு
# 2024-2025



காட்சிக்கு எளியன் கடுஞ்சொல்லன் அல்லனேல்
மீக்கூறும் மன்னன் நிலம்

(குறள் – 386)

*குடிமக்கள் எவரும் எளிதில்
அணுகக்கூடியவராகவும், எவரிடத்திலும்
கடுமையான சொற்களைக் கூறாது ஆட்சிபுரிந்து
வரும் அரசரின் நாட்டை உலகமே போற்றும்*

# வரவு – செலவுத் திட்டம் 2024-25
# வரவு – செலவுத் திட்டத்தின் பொருண்மைகள்

(வரவு – செலவுத் திட்ட உரையில் உள்ளவாறு)




## வரவு – செலவுத் திட்டத்தின் மொத்த மதிப்பு**

**மொத்த செலவினங்கள்**
**₹ 4,12,504 கோடி**

**மொத்த வரவினங்கள்**
**₹ 3,03,814 கோடி**




## மொத்த வரவினங்கள் மற்றும் மொத்த செலவினங்கள்

**பொதுக் கடன் நீங்கலாக

## மாநிலத்தின் வருவாயினங்கள்


2024-25 ஆம் ஆண்டுக்கான வருவாய் வரவினங்கள் 2,99,010 கோடி ரூபாயாக அரசு மதிப்பீடு செய்துள்ளது. மொத்த வருவாய் வரவினங்களில் 75.6 சதவீதம் மாநிலத்தின் சொந்த வருவாயாகும். மீதமுள்ள 24.4 சதவீதம் ஒன்றிய வரிகளில் பங்கு மற்றும் ஒன்றிய அரசிடமிருந்து பெறும் உதவி மானியங்கள் ஆகும்.




| மாநிலத்தின் சொந்த வரி வருவாய் | மாநிலத்தின் சொந்த வரி அல்லாத வருவாய் | ஒன்றிய அரசிடமிருந்து பெறும் உதவி மானியங்கள் | மத்திய வரிகளில் பங்கு |
|---|---|---|---|
| ₹ 1,95,173 கோடி | ₹ 30,728 கோடி | ₹ 23,354 கோடி | ₹ 49,755 கோடி |

அரசின் சொந்த வரி வருவாய் 2024-25 ஆம் ஆண்டில் 14.7 சதவீதம் உயருமென மதிப்பிடப்பட்டுள்ளது. மாநிலத்தின் சொந்த வரி வருவாயின் முக்கிய கூறுகள் பின்வருமாறு:-

### மாநிலத்தின் சொந்த வரி வருவாய்



## மாநிலத்தின் செலவினம்

2024-25 ஆம் ஆண்டிற்கான அரசின் மொத்த செலவினங்கள் ₹ 4,12,504 கோடி ரூபாயாக மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது. இது 2023-24 (திருத்த மதிப்பீடுகள்) ஆம் ஆண்டை விட 11.7 சதவீதம் அதிகமாகும்.

## வருவாய்ச் செலவினம்

வருவாய்ச் செலவினத்தில் பெரும் பகுதி, பொது மக்களுக்கான, குறிப்பாக ஏழை எளிய மக்களுக்கான பல்வேறு நலத் திட்டங்களுக்காக மேற்கொள்ளப்படுகிறது.

### மொத்த வருவாய்ச் செலவினம் ₹ 3,48,289 கோடி

- செயல்பாடுகளும் பராமரிப்புகளும் — ₹ 15,063 கோடி
- ஓய்வூதியம் மற்றும் ஓய்வுகால பலன்கள் — ₹ 37,664 கோடி
- வட்டி செலுத்துதல் — ₹ 63,722 கோடி
- சம்பளங்கள் — ₹ 84,932 கோடி
- உதவித் தொகைகளும் மானியங்களும் — ₹ 1,46,908 கோடி

## மூலதனச் செலவினம்

மூலதனப் பணிகளுக்கு செலவிடுவதன் மூலம் பொருளாதார வளர்ச்சிக்கான உந்துதலை அரசு அளிக்கிறது. 2024-25 ஆம் ஆண்டிற்கான மூலதனச் செலவு ₹ 47,681 கோடி ரூபாயாக மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது. இது 2023-24 (திருத்த மதிப்பீடுகள்) ஆம் ஆண்டை விட 12.1 சதவீதம் அதிகமாகும்.

### முக்கியத் துறைகளுக்கான மூலதனச் செலவினம்



சாலைகள் மற்றும் பாலங்கள்
₹ 17,890 கோடி



போக்குவரத்துத் துறை
₹ 2,966 கோடி



நகர்ப்புற வளர்ச்சி
₹ 3,767 கோடி



குடிநீர் வழங்கல் திட்டங்கள்*
₹ 9,535 கோடி



நீர் நிலைகள்
₹ 4,747 கோடி



கல்வி மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறைகள்
₹ 2,810 கோடி


### மொத்த மூலதனச் செலவு ₹ 47,681 கோடி ரூபாய்

*திட்ட முகமைக்கு நேரடியாக வழங்கப்படும் தொகை உட்பட


## வருவாய்ப் பற்றாக்குறை

இந்த ஆண்டின் வருவாய்ப் பற்றாக்குறை 44,907 கோடி ரூபாயாக மதிப்பிடப்பட்டுள்ளது. இது தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் மின் பகிர்மான கழகத்திற்கு வழங்கப்பட்ட 17,117 கோடி ரூபாய் நிதி இழப்பீட்டு மானியத்தை உள்ளடக்கியது. இது நீங்கலாக, வருவாய்ப் பற்றாக்குறை 27,790 கோடி ரூபாயாகும். அடுத்த ஆண்டு, தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் மின் பகிர்மான கழகத்திற்கு வழங்கப்படவுள்ள நிதி இழப்பீட்டு மானியம் 14,442 கோடி ரூபாயாகும். இது நீங்கலாக, வருவாய்ப் பற்றாக்குறை 34,837 கோடி ரூபாயாக இருக்கும் என மதிப்பிடப்பட்டுள்ளது.

### வருவாய்ப் பற்றாக்குறையின் போக்கு





### தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் மின் பகிர்மான கழகத்திற்கு வழங்கப்படும் நிதி இழப்பீடு நீங்கலான வருவாய்ப் பற்றாக்குறையின் போக்கு





## நிதிப் பற்றாக்குறை

நிதிப் பற்றாக்குறை இந்த ஆண்டு மாநில மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 3.45 சதவீதமாகும். அது அடுத்த ஆண்டில், 3.44 சதவீதமாக குறையும் என எதிர்பார்க்கப்படுகிறது.


### மாநிலத்தின் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் நிதிப் பற்றாக்குறையின் போக்கு



## ஒரு ரூபாய் எவ்வாறு திரட்டப்படுகிறது




## ஒரு ரூபாய் எவ்வாறு செலவிடப்படுகிறது



## 2024-25 வரவு செலவுத் திட்டத்தில் முக்கியத் துறைகள் சார்ந்த நிதி ஒதுக்கீடுகள்

- நகர்ப்புற வளர்ச்சி — ₹41,733 கோடி
- ஊரக வளர்ச்சி — ₹27,922 கோடி
- நெடுஞ்சாலைகள் — ₹20,043 கோடி
- போக்குவரத்து — ₹9,787 கோடி
- நீர்வளம் — ₹8,398 கோடி
- ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலன் — ₹3,706 கோடி
- தொழில் மற்றும் குறு, சிறு, நடுத்தர நிறுவனங்கள் — ₹4,481 கோடி
- கல்வி — ₹52,254 கோடி
- சமூகநலன் — ₹7,830 கோடி
- மக்கள் நல்வாழ்வு — ₹20,198 கோடி
- காவல் — ₹12,543 கோடி
- எரிசக்தி — ₹22,310 கோடி

வருவாய்ச் செலவினம், மூலதனச் செலவினம் மற்றும் கடன் வழங்குதலைக் குறிக்கின்றது

# புதிய அறிவிப்புகள் - முக்கிய அம்சங்கள்



**தமிழ்ப் புதல்வன்**

**₹ 360 கோடி**

அரசுப் பள்ளிகளில் பயிலும் 6 முதல் 12ஆம் வகுப்பு மாணவர்களுக்கு மாதம் ரூ.1,000/- உயர்கல்வி தொடர



**கோயம்புத்தூரில் தகவல் தொழில்நுட்பப் பூங்கா**

**₹ 1,100 கோடி**



**கலைஞரின் கனவு இல்லம்**

**₹ 3,500 கோடி**

2030 ஆம் ஆண்டிற்குள் வீடொன்றிற்கு ₹ 3.5 இலட்சத்தில் 8 இலட்சம் வீடுகள்



**வடசென்னை வளர்ச்சித் திட்டம்**

**₹ 1,000 கோடி**



**விருதுநகர் மற்றும் சேலம் மாவட்டங்களில் ஜவுளிப் பூங்கா**

**₹ 2,483 கோடி**



**தொல்குடி**

**₹ 1,000 கோடி**

பழங்குடியினர் வாழ்விடங்களில் அடிப்படை வசதிகளை மேம்படுத்துதல் மற்றும் வாழ்வாதாரத்தை உயர்த்திடுதல்



**அடையாறு நதியை சீரமைக்கும் திட்டம்**

**₹ 1,500 கோடி**



**நடுநிலை மற்றும் தொடக்கப் பள்ளிகளில் உயர்தொழில்நுட்ப ஆய்வகங்கள் மற்றும் திறன்மிகு வகுப்பறைகள்**

**₹ 960 கோடி**



**திண்டுக்கல், நாமக்கல் மற்றும் பெரம்பலூர் மாவட்டங்களில் கூட்டுக்குடிநீர் திட்டங்கள்**

**₹ 1,289 கோடி**



**பிராட்வே பேருந்து நிலையம் நவீன வசதிகளுடன் விரிவாக்கம்**

**₹ 823 கோடி**

# புதிய அறிவிப்புகள் - முக்கிய அம்சங்கள்



சென்ட்ரல் இரயில் நிலையத்திற்கு எதிரே 27 தளங்களைக் கொண்ட நகர்ப்புரச் சதுக்கம்

₹ 688 கோடி



நீலக் கொடி கடற்கரைகள் சான்றிதழ் பெற முக்கியமான கடற்கரைகளை மேம்படுத்துதல்

₹ 250 கோடி



ஊராட்சி ஒன்றிய ஏரிகள், குளங்களை சீரமைத்தல்

₹ 500 கோடி



கைத்தறி மற்றும் கைவினைப் பொருட்களை காட்சிப்படுத்துவதற்கு புதிய ஒன்றிணைந்த வளாகம்

₹ 227 கோடி




பூந்தமல்லியில் அதிநவீனத் திரைப்பட நகரம்

₹ 500 கோடி



பொது நூலகங்களில் கட்டமைப்பு வசதிகள் மேம்பாடு

₹ 213 கோடி



ஊரகப் பகுதிகளில் 2,000 மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகள்

₹ 365 கோடி



கல்லூரிகளில் புதிய திறன் பயிற்சிக் கட்டமைப்புகள்

₹ 200 கோடி

அரசு மற்றும் அரசு உதவிபெறும் 100 பொறியியல் மற்றும் கலை அறிவியல் கல்லூரிகளில்

# புதிய அறிவிப்புகள் - முக்கிய அம்சங்கள்



10 புதிய அரசு பயிற்சி நிறுவனங்கள்

₹ 111 கோடி



புதிய கைவினைஞர்கள் நலத் திட்டம்

₹ 20 கோடி



தீவுத் திடலில் நவீன சமூகக் கட்டமைப்பு வசதிகள்

₹ 104 கோடி




கீழடியில் திறந்தவெளி தொல்லியல் அருங்காட்சியம்

₹ 17 கோடி



ஆயிரம் ஆண்டுகள் பழமையான திருக்கோவில்களில் திருப்பணிகள்

₹ 100 கோடி



கணித்தமிழ் வளர்ச்சி

₹ 5 கோடி

இயந்திரவழிக் கற்றல், செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பங்களை உருவாக்கிடும் புத்தொழில் நிறுவனங்களுக்கு நிதியுதவி



புற உலகச் சிந்தனையற்ற மதி இறுக்கம் உடையோருக்கான உயர்திறன் மையம்

₹ 25 கோடி



முதலமைச்சரின் தாயுமானவர் திட்டம்

5 இலட்சம் குடும்பங்கள்

தேவையான உதவிகள் வழங்கி ஏழ்மையிலிருந்து விடுவிக்கப்படுவர்

# புதிய அறிவிப்புகள் - முக்கிய அம்சங்கள்



கோயம்புத்தூரில் முத்தமிழறிஞர் கலைஞர் மாபெரும் நூலகம் மற்றும் அறிவியல் மையம்



பசுமை ஆற்றல் நிறுவனம்



தூத்துக்குடி மாவட்டத்தில் புதிய விண்வெளி தொழில் மற்றும் உந்துசக்திப் பூங்கா



ஒரு இலட்சம் கல்லூரி மாணவர்களுக்கு கல்விக்கடன்



அடுக்குமாடி ஆயத்தத் தொழில் வளாகங்கள் - கோயம்புத்தூர், கிருஷ்ணகிரி மற்றும் திருவள்ளூர் மாவட்டங்கள்



சுயஉதவிக் குழுக்களுக்கு வங்கிக் கடன்

**₹ 35,000 கோடி - இலக்கு**

சுய உதவிக் குழுக்களுக்கு வங்கி கடனுதவி



தமிழ்நாடு செயற்கை நுண்ணறிவு இயக்கம்



புதிய பேருந்துகள்

**3,000 புதிய பேருந்துகள்**

# செயல்பாட்டில் உள்ள
# முக்கியத் திட்டங்களுக்கான நிதி ஒதுக்கீடு



### தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகத்திற்கு நிதி உதவி

**₹ 29,730 கோடி**

வேளாண்மை, வீடுகளுக்கான மின் நுகர்வு உதவித் தொகை மற்றும் நிதி இழப்பீடு



### தமிழ்நாடு போக்குவரத்துக் கழகங்களுக்கு நிதியுதவி

**₹ 6,396 கோடி**

மகளிருக்கு பேருந்துகளில் இலவச பயணச்சீட்டு, மாணாக்கர்களுக்கு இலவச பயணச்சீட்டு மற்றும் பயணச் சலுகை, டீசல் மானியம், நிரவல் நிதியுதவி



### மகளிர் உரிமைத்தொகை

**₹ 13,720 கோடி**



### சமூகப் பாதுகாப்பு ஓய்வூதியங்கள்


**₹ 5,426 கோடி**

முதியோர் ஓய்வூதியம், விதவை ஓய்வூதியம் போன்றவை



### சென்னை மெட்ரோ இரயில் திட்டம் - II

**₹ 12,000 கோடி**



### ஜல் ஜீவன் இயக்கம்

**₹ 8,224 கோடி***



### பொது விநியோகத் திட்டத்திற்கு மானியம்

**₹ 10,500 கோடி**



### கடன் தள்ளுபடி திட்டங்கள்

**₹ 3,859 கோடி**

பயிர்க்கடன் தள்ளுபடி, நகைக்கடன் தள்ளுபடி, மகளிர் சுயஉதவிக்குழு கடன் தள்ளுபடி



### விரிவான சாலை உட்கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டம்

**₹ 8,365 கோடி**



### மகாத்மா காந்தி ஊரக வேலைவாய்ப்பு உறுதித் திட்டம்

**₹ 3,300 கோடி**

100 நாள் வேலை உறுதித் திட்டம்

*திட்ட முகமைக்கு நேரடியாக வழங்கப்படும் தொகை உட்பட

# செயல்பாட்டில் உள்ள
# முக்கியத் திட்டங்களுக்கான நிதி ஒதுக்கீடு



**ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வி திட்டம் (சமக்ரா சிக்ஷ அபியன்)**

₹ 3,299 கோடி



**தொழில் நிறுவனங்களுக்கான முதலீட்டு ஊக்குவிப்பு மானியம்**

₹ 1,506 கோடி




**புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர் சத்துணவுத் திட்டம் மற்றும் ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சிப் பணிகள் திட்டம்**

₹ 5,871 கோடி



**முதலமைச்சரின் விரிவான மருத்துவ காப்பீட்டுத் திட்டம்**

₹ 1,487 கோடி



**தேசிய சுகாதார இயக்கத் திட்டங்கள்**

₹ 2,582 கோடி



**கலைஞர் நகர்ப்புற மேம்பாட்டுத் திட்டம்**

₹ 1,000 கோடி




**பிரதம மந்திரி வீட்டுவசதி திட்டம் (நகர்ப்புறம்) – அனைவருக்கும் வீட்டுவசதித் திட்டம்**

₹ 2,100 கோடி



**முதல்வரின் கிராம சாலைகள் மேம்பாட்டுத் திட்டம்**

₹ 1,000 கோடி



**பிரதம மந்திரி பயிர் காப்பீட்டுத் திட்டம்**

₹ 1,775 கோடி



**மாற்றுத் திறனாளிகள் நலன்**

₹ 604 கோடி

பராமரிப்பு உதவித் தொகை மற்றும் மாற்றுத் திறனாளிகளுக்கு ஓய்வூதியம்

# செயல்பாட்டில் உள்ள முக்கியத் திட்டங்களுக்கான நிதி ஒதுக்கீடு



**முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம்**

₹ 600 கோடி



**அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்டம்**

₹ 250 கோடி



**7.5 சதவீதம் உள் ஒதுக்கீடு வழங்கப்பட்ட அரசு பள்ளி மாணவர்களின் கல்விக் கட்டணம்**

₹ 511 கோடி



**கலைஞரின் அனைத்து கிராமங்கள் ஒருங்கிணைந்த வேளாண்மை வளர்ச்சித் திட்டம்**

₹ 200 கோடி




**சிங்காரச் சென்னை 2.0**

₹ 500 கோடி

**நான் முதல்வன்**

₹ 150 கோடி



**புதுமைப்பெண் திட்டம்**

₹ 370 கோடி

அரசுப் பள்ளிகளில் பயின்று (6-12) தேர்ச்சி பெற்று உயர் கல்வி தொடரும் மாணவிகளுக்கு

**இன்னுயிர் காப்போம் நம்மை காக்கும் 48 திட்டம்**

₹ 125 கோடி

# செயல்பாட்டில் உள்ள
# முக்கியத் திட்டங்களுக்ககான நிதி ஒதுக்கீடு



**அண்ணல் அம்பேத்கர் தொழில் முன்னோடிகள் திட்டம்**

**₹ 120 கோடி**

ஆதிதிராவிட/பழங்குடியின தொழில் முனைவோரின் பொருளாதார வளர்ச்சியை ஊக்குவித்தல்



**முதலமைச்சரின் ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியின சமூக பொருளாதார வளர்ச்சி திட்டம் (CM-ARISE)**

**₹ 50 கோடி**



**இல்லம் தேடி கல்வி**

**₹ 100 கோடி**



**பள்ளிக் குழந்தைகள்**

**₹ 1,657 கோடி**

பாடப்புத்தகங்கள், நோட்டுப் புத்தகங்கள், கல்வி உபகரணங்கள், சீருடைகள், காலணிகள் மற்றும் மிதிவண்டிகள்



**மக்களைத் தேடி மருத்துவம்**

**₹ 50 கோடி**



**மீனவர் நலன்**

**₹ 658 கோடி**



**ஆதிதிராவிடர் / பழங்குடியின தொழில் முனைவோர்களுக்கான புத்தொழில் நிதி**

**₹ 50 கோடி**



**டாக்டர். முத்துலட்சுமி ரெட்டி மகப்பேறு உதவித் திட்டம்**

**₹ 872 கோடி**

# வரவு-செலவுத் திட்டம்-ஒரு கண்ணோட்டம்

₹ கோடியில்

| வ.எண் | வகைப்பாடு | 2022-23 கணக்குகள் | 2023-24 திருத்த மதிப்பீடு | 2024-25 வரவு-செலவுத் திட்ட மதிப்பீடு |
|---|---|---|---|---|
| 1. | மொத்த வருவாய் வரவுகள் | 2,43,749 | 2,72,577 | 2,99,010 |
| 2. | மொத்த வருவாய்ச் செலவினம் | 2,79,964 | 3,17,484 | 3,48,289 |
| 3. | வருவாய்ப் பற்றாக்குறை | 36,215 | 44,907 | 49,279 |
| 3(அ). | தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் மின் பகிர்மான கழகத்திற்கு வழங்கப்படும் நிதி இழப்பீடு | 12,315 | 17,117 | 14,442 |
| 3(ஆ) | தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் மின் பகிர்மான கழகத்திற்கு வழங்கப்படும் நிதி இழப்பீடு நீங்கலான வருவாய்ப் பற்றாக்குறை | 23,900 | 27,790 | 34,837 |
| 4. | மூலதன வருவாய் | 42 | 3 | 3 |
| 5. | மூலதனச் செலவினம் | 39,530 | 42,532 | 47,681 |
| 6. | நிகரக் கடன்கள் மற்றும் முன்பணங்கள் | 6,183 | 6,624 | 11,733 |
| 7. | மாநில மொத்த உள்நாட்டு உற்பத்தியில் நிதிப் பற்றாக்குறை சதவீதம் | 3.46 | 3.45 | 3.44 |

# சொற்களஞ்சியம்

**அ) வருவாய் வரவினம்**

மாநில அரசு விதிக்கும் வரிகள் மற்றும் தீர்வைகள், கட்டணங்கள், அபராதங்கள் ஆகியவற்றின் கீழ் பெறப்படும் மொத்த வருவாய் மற்றும் ஒன்றிய அரசிடமிருந்து பெறப்படுபவை ஆகியவற்றை உள்ளடக்கியதாகும்.

**ஆ) வருவாய்ச் செலவினம்**

சம்பளங்கள், ஓய்வூதியங்கள் மற்றும் ஏனைய ஓய்வூதியப் பலன்கள், செயல்முறைகள் மற்றும் பராமரிப்புச் செலவினம், நிலுவையிலுள்ள கடன்களுக்கான வட்டி மற்றும் வளர்ச்சித் திட்டங்களுக்காக அளிக்கப்படும் மானியங்கள் மற்றும் நல்கைகள் மற்றும் பல செலவினங்கள் இதில் அடங்கும்.

**இ) மூலதனச் செலவினம்**

சாலைகள் மற்றும் பாலங்கள், பாசன அமைப்புகள், பள்ளி மற்றும் மருத்துவமனை கட்டடங்கள் போன்ற அசையா சொத்துக்களை உருவாக்குவதற்காகவும், பொதுத்துறை நிறுவனங்களில் முதலீடு செய்வதற்கும் மேற்கொள்ளப்படும் செலவினம் மூலதனச் செலவினமாகும்.

**ஈ) கடன்கள் மற்றும் முன்பணங்கள்**

மாநில பொதுத்துறை நிறுவனங்கள், கூட்டுறவுச் சங்கங்கள் ஆகியவற்றிற்கு அரசு வழங்கும் தொகைகள் கடன் செலவினமாகும். அத்தகைய நிறுவனங்களிடமிருந்து திரும்பப் பெறப்படும் கடன்கள் மற்றும் முன்பணங்கள் கடன் வரவினமாகக் கருதப்படும்.

**உ) வருவாய் உபரி / வருவாய்ப் பற்றாக்குறை**

வருவாய்ச் செலவினத்தைக் காட்டிலும் வருவாய் வரவினங்கள் மிகையாக இருப்பின், அது வருவாய் உபரி எனப்படும். வருவாய் வரவினங்களைக் காட்டிலும் வருவாய்ச் செலவினம் மிகையாக இருப்பின், அது வருவாய்ப் பற்றாக்குறை எனப்படும்.

**ஊ) நிதிப் பற்றாக்குறை**

மொத்த வரவினங்களுக்கும் (அதாவது வருவாய் மற்றும் மூலதன வரவினங்கள்) மற்றும் மொத்தச் செலவினங்களுக்கும் (அதாவது வருவாய்ச் செலவினம் மற்றும் அரசு வழங்கும் நிகரக் கடன்கள் மற்றும் முன்பணங்கள் உள்ளிட்ட மூலதனச் செலவினம்) இடையேயுள்ள வேறுபாடு நிதிப் பற்றாக்குறை எனப்படும்.

**எ) கடன்**

பற்றாக்குறையினை ஈடுகட்டுவதற்கு அரசு வாங்கும் கடன்களைக் குறிக்கும்.

**குறிப்பு:** அனைத்து வரவு-செலவுத் திட்ட ஆவணங்களையும் கீழ்காணும் இணையத்தின் வாயிலாக பார்க்கவும் / பதிவிறக்கவும் இயலும் https://financedept.tn.gov.in

நிதித் துறை,
தமிழ்நாடு அரசு,
புனித ஜார்ஜ் கோட்டை,
சென்னை-600 009.

**நிதித் துறை**
**தமிழ்நாடு அரசு**
**புனித ஜார்ஜ் கோட்டை, சென்னை-600 009.**

Website : https://www.financedept.tn.gov.in